**வண்ணாத்திவில்லு பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வண்ணாத்திவில்லு பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வண்ணாத்திவில்லு பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(I)(ஈ)(III) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(I)(ஈ)(IV) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் காணாமல் போன ரூபா 42,270 தொகையான பொருள் இருப்பு சம்பந்தமாக கணக்குகளில் வெளிப்படுத்தப்படவில்லை. | எதிர்காலத்தில் நாட்குறிப்பின் மூலம் நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வண்ணாத்திவில்லு சிறுவர் பூங்கா மற்றும் எலுவன்குளம் சுற்றுலா விடுதி அமைந்துள்ள 01 ஏக்கர் 02 றூட் காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | இக்காணிகளை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | வாகனங்களை சேவை செய்யும் நிலையத்திற்காக வெளித் தரப்பினரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 10,000 பெறுமதியான தற்பொழுது காணாமல் | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | செலுத்த வேண்டிய பெறுமதி தொடர்பாக கணக்குகளில் வெளிப்படுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| போயுள்ள தண்ணீர் மோட்டருக்காகச் செலுத்த வேண்டிய பெறுமதி தொடர்பாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்காமையின் காரணமாக ரூபா 209,155,080 தொகையான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | உறுதி மாற்றல்கள் மற்றும் மீதிகளின் உறுதிப்படுத்தல் பெற்றுக்கொள்ளப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தி எழுத்து மூலச் சான்றுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவுகள் ரூபா 1,045,373 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவுகள் ரூபா 2,662,719 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) வீத வரியாக ரூபா 199,309 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையான வீத வரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கின்றேன். | நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கு றடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) ஆய்வினை மேற்கொண்டு ஏக்கர் வரியினை அறவீடு செய்ய வேண்டிய காணிகள் இனங்காணப்பட்டிருக்காத துடன் ரூபா 144,537 தொகையான நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையான ஏக்கர் வரி பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாகத் தெரிவிக்கின்றேன். | வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றலை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார வரி மற்றும் கைத்தொழில் வரியின் ரூபா 77,760 மொத்த தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய உத்தியோகத்தர் களுக்கு இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என தயவாகத் தெரிவிக்கின்றேன். | நிலுவை வரிகளை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | 03 வியாபார நிலையங்கள் தொடர்பான ரூபா 200,980 கூட்டுத்தொகையான நிலுவையாக உள்ள குத்தகை வாடகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவையான தவணைப் பணத்தை அறவீடு செய்வதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கின்றேன். | நிலுவையான கடை வாடகைகளை விரைவாக அறவீடு செய்வதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். |
| (v) | வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட 21 கடைகளிலிருந்து 2013-2020 காலப்பகுதி தொடர்பாக அறவிட வேண்டியிருந்த ரூபா 502,918 தொகையான நிலுவை வாடகைகளை விரைவாக அறவீடு செய்வதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் கடைகளை மீளப் பொறுப்பேற்பதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையான கடை வாடகைகளை அறவீடு செய்வதற்கு எடுக்கக்கூடிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதுடன் உரிய கடைகள் அமைந்துள்ள காணியை பிரதேச செயலாளரினால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் அடிப்படையில் கடைகளை மீளப் பொறுப்பேற்பதற்கு முடியாதிருந்தது என தெரிவிக்கின்றேன். | நிலுவையான கடை வாடகைகளை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | 2020 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 72 வியாபார அலகுகள் தொடர்பாக அறவிட வேண்டிய நிலுவையாக உள்ள ரூபா 70,500 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய உத்தியோகத்தர் களுக்கு இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கின்றேன். | நிலுவையான வியாபார உத்தரவு பத்திரக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு, வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 3,209,301 பெறுமதியான கட்டிடங்கள், ரூபா 2,811,200 பெறுமதியான உடலை வலுப்படுத்தல் உபகரண இருப்பு என்பன 2019 ஆம் ஆண்டிலிருந்து விளைவற்றுக் காணப்பட்டன. | இக்கட்டிடங்களை ஏனைய செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளேன். | சொத்துக்களை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | | | |
| (i) | பிரதேச சபையின் உத்தியோகத்தர்களால் அடிக்கடி மேற்கொள்ளப் பட்ட பரிசோதனையின் போது சேவையில் ஈடுபடுவதில்லை என உறுதிப்படுத்தப்பட்ட ஒரு நூல் நிலைய உதவியாளருக்கு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படாது 2020 ஆம் ஆண்டில் சம்பளமாக ரூபா 527,400 செலுத்தப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ள துடன் எதிர்காலத்தில் இது சம்பந்தமாக உள்ளூராட்சி திணைக்களத்தின் மூலம் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கின்றேன். | ஊழியர் நிருவாகத்தின் போது காணப்படுகின்ற சட்ட விதிகளை பின்பற்றுதல் வேண்டும். |
| (ii) | மேலும் அந்த சேவை நிலையத்தில் இருந்த ரூபா 42,270 பெறுமதியான பொருட்கள் மற்றும் பண இருப்பு காணாமல் போயிருந்தும் அதற்கு பொறுப்புக்கூறக் கூடிய நபர்களை கணக்காய்வுத் திகதியான 2021 மார்ச் 05 ஆந் திகதி வரை தொடக்க விசாரணைகளை மேற்கொண்டு இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொலிசாரின் மூலம் பீ.ஆர் 74443/2020 ஆம் இலக்க வழக்கின் கீழ் புத்தளம் நீதவான் நீதிமன்றத்திற்கு விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது என பொலிஸ் அறிக்கையின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது என தெரிவிக்கின்றேன். | விசாரணைகள் தொடர்பாக பின் தொடர் நடவடிக்கை எடுத்து விரைவாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்<br>-----------------------------------------------<br>சபையினால் ரூபா 4,238,610 செலவு செய்து 2017 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட கழிவு முகாமைத்துவ செயற்திட்டம் 2018 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டிருந்ததுடன் 2020 ஆகஸ்ட் 19 ஆந் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. சபையினால் ஒரு நாளைக்கு உக்குகின்ற 305 கிலோ அளவான கழிவுகள் சேகரிக்கப்பட்டிருந்தும் 2020 ஆம் ஆண்டில் 250 கிலோ கிராம் பசளைகளே தயாரிக்கப்பட்டிருந்ததனால் இந்த திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையம் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை என்பது கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. | திண்மக்கழிவு நிலையத்தின் தளத்திலுள்ள கொங்கிறீட் உடைந்து பழுதடைந்துள்ளதனால் சேதனப் பசளை செய்யும் நடைமுறை நிறுத்தப்பட்டிருந்தும் 2020 ஆம் ஆண்டில் அதனை திருத்தம் செய்ததன் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. காணப்படுகின்ற ஊழியர் பற்றாக்குறையின் காரணமாக உக்குகின்ற கழிவுகளை சேதனப் பசளை செய்யும் நடைமுறைக்கு உட்படுதல் அதேநாளில் இடம்பெறுவதில்லை உயிரினங்களால் மேற்கொள்ளப்படுகின்ற அச்சுறுத்தல்களின் அடிப்படையில் குப்பைகளை முழுமையாகப் பயன்படுத்த முடியாதுள்ளது. | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்பட வேண்டியதுடன் இயந்திரங்கள் பூரணமாகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

**3.2 பெறுகை முகாமைத்துவம்**

-----------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகைக் குழுவின் மூலம் பெறுகைத் தீர்மானம் எடுக்கப்படாது ரூபா 1,317,050 பெறுமதியான 19 டயர்கள் ஏற்கனவே கொள்வனவு செய்த வழங்குனரிடமிருந்து தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | தலைவரின் வாகனத்திற்காக டயர்களைக் கொள்வனவு செய்யும் போது பெறுகை நடைமுறையில் சில குறைபாடுகள் ஏற்பட்டுள்ளது என்பதனை ஏற்றுக் கொள்கின்றேன். | பெறுகை வழிகாட்டிக் கோவைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |